2) e-Pay Roll-ல் ஊதியம் பெறும் பணியாளர்கள் அனைவரது விபரம் IFHRMS மென்பொருளில் இருப்பதினை உறுதி செய்திடல் வேண்டும்.
3) பிழைப்பூதியம் மற்றும் தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்களின் விபரம் IFHRMS - ல் பதிவேற்றம் செய்திருப்பதினை உறுதி செய்திடல் வேண்டும்.
4) HR Module –லில் நாளது தேதிவரை அனைத்து விவரங்களை பதிவேற்றம் செய்யவேண்டும். பணியிடமாற்றம், பதவி உயர்வு மற்றும் பதவி ஏற்பு போன்றவை தொடர்பான பதிவுகள் IFHRMS லும் மேற்கொள்ளல் வேண்டும்.
5) அனைத்து பணியாளர்களின் e-Pay Roll சம்பளப் பட்டியல்களின் மொத்தம் (Gross) நிகரத் தொகை (Net) IFHRMS-ல் சரியாக உள்ளதினை உறுதி செய்திடல் வேண்டும்.
6) State Bank of Travancore, State Bank of India உடன் இணைக்கப்பட்ட வங்கிகளின் IFSC Code சரிபார்த்து IFHRMS-ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
7) பெருமளவு பயனர்களைக் கொண்ட பட்டியல்களின் (Bulk beneficiaries) முதியோர் உதவித் தொகை, முத்துலெட்சுமி ரெட்டி திட்ட உதவித் தொகை, திருமண உதவித் தொகை, வேலைவாய்ப்பற்றோர் மற்றும் ஊனமுற்றோர் உதவித் தொகை, அங்கன்வாடி, சத்துணவு பணியாளர்கள் மற்றும் ICDS பயனர்களின் விபரம் IFHRMS-ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும். இதனைச் சம்பந்தப்பட்ட பணம் பெறும் அலுவலர் / சிறப்பு துணை ஆட்சியர்கள் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) உறுதி செய்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
8) அரசு உதவி பெறும் பள்ளிகளில் (Aided School) உள்ள செயலர் / தாளாளர்களுக்கு Sanction Role ஒதுக்கல் செய்திடல் வேண்டும்.

01.07.2020-லிருந்து ATBPS மற்றும் e-Pay Roll சேவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, IFHRMS ல் மட்டுமே பட்டியல்கள் தயார் செய்து கருவூலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆகையால் மேற்கண்ட அனைத்துப் பணிகளையும் திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பணம் பெறும் அலுலர்களும் திறம்பட நிறைவு செய்துள்ளதினை உறுதி செய்திடல் வேண்டும். மேலும் IFHRMS திட்டம் ஜீலை-2020 1ஆம் தேதி முதல் வேலூர் மாவட்ட கருவூல அலகில் (ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம்) முழு அளவில் நடைமுறைப்படுத்திட தங்களின் முழு ஒத்துழைப்பினை நல்கிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருப்பத்தூர்

2/6/2020